பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 10 2024 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

- மக்கள் நலனோடு பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்வதே கூட்டுறவுத்துறையின் சிறப்பு அம்சமாகும் என்று மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை கொண்டுவர உறுதிபூண்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 14 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

- உலகக்கோப்பை மகளிர் டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக நியூசிலாந்து முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

<<<<<>>>>>

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் நாளை காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு, மாலை ஆறு மணிவரை நடைபெறும்.

இந்த தேர்தலில், இரண்டு கோடிக்கும் மேற்பட்டோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 20 ஆயிரத்து 629 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

101 பெண்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

வாக்கு எண்ணிக்கை வரும் 8-ஆம்தேதி நடைபெறும்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் அன்றைய தினம் எண்ணப்பட உள்ளன.

<<<<<>>>>>

மக்கள் நலனோடு பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்வதே கூட்டுறவுத்துறையின் சிறப்பு அம்சமாகும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று அகமதாபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்கள் நலனை உறுதி செய்யாமல் எந்தவொரு நாடும் பொருளாதார வளர்ச்சியை எட்ட இயலாது என்றார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

இதனிடையே, திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட வடமாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியின்போது இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானதாக குறை கூறியுள்ளார்.

அண்மையில், ஐந்தாயிர்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதில், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒருவருக்கு தொடர்பு இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>

பாகிஸ்தானில் வரும் 15 மற்றும் 16-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில், பங்கேற்கும் இந்திய குழுவிற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தலைமையேற்க உள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் இதனை உறுதிபடுத்தினார்.

இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியான ஜாகீர் நாயக், பாகிஸ்தானுக்கு சென்றதில் ஆச்சரியம் ஏதும் இல்லை என்றும், அவருக்கு அந்நாட்டு அரசு வரவேற்பு அளித்தது கண்டிக்கத்தக்கது என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை கொண்டுவர மத்திய அரசு அரசு உறுதிபூண்டிருப்பதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதா தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு தெரிவிக்கும் அனைத்து பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று கூறினார்.

இந்த மசோதா மூலம் இஸ்லாமிய சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வசதிபடைத்த இஸ்லாமியர்களிடமிருந்து, வக்ஃப் வாரிய சொத்துக்களை மீட்பதே இந்த மசோதாவை கொண்டுவருவதன் நோக்கம் என்றும் திரு கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் கடந்தாண்டில் பத்து லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக சர்வதேச ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த துறையில் உலக அளவில் ஒரு கோடியே 62 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புனல் மின்சாரத்துறையில் அதிகபட்சமாக 4 லட்சத்து 53 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், அடுத்தப்படியாக சூரியசக்தி துறையில் 3 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் முதல் முறையாக ஐந்து நியமன சட்டப்பேரவை உறுப்பினர்களை அம்மாநில துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா அறிவிக்கவுள்ளார்.

அங்கு சட்டப்பேரவைத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், ஆட்சி அமைப்பதில் நியமன உறுப்பினர்களின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இடம்பெயர்ந்த காஷ்மீரி பிரிவினர் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரை சேர்ந்தவர்களுக்கு நியமன சட்டப்பேரவை உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட உள்ளது.

தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்படும் என்று எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 14 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நாராயண்பூர் மாவட்டம் அபுஜ்மாட் என்ற இடத்தில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் உள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, மாநில காவல்துறையினருடன், துணை ராணுவப்படையினரும் சென்ற போது இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அந்த பகுதியில் இருந்து ஏகே-47 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினம் வரும் எட்டாம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, சென்னையில் விமானப்படையின் சாகச நிகழ்ச்சி நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

மெரினா கடற்கரையில் நடைபெற்ற இந்த சாகச நிகழ்ச்சிக்கான முழு ஒத்திகை இன்று நடைபெற்றது.

இதனை ஏராளமானோர் பார்வையிட்டனர்.

<<<<<>>>>>

உத்திரபிரதேச மாநிலம் மிர்ஸாபூர் மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மிர்ஸாபூர் - வாரணாசி எல்லைப்பகுதியில் தொழிலாளர்களை ஏற்றி சென்ற டிராக்டர், லாரியுடன் மோதிய விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க திரு நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல், உத்தரப்பிரதேச மாநில அரசும் தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

மாலத்தீவு அதிபர் திரு Mohammed Muizzu ஐந்து நாள் பயணமாக நாளை மறுநாள் இந்தியா வருகிறார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் அழைப்பின் பேரில், வரும் 10-ஆம்தேதிவரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவர், குடியரசுத் தலைவர், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் உயரதிகாரிகளை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த மாலத்தீவு மேற்கொண்டுள்ள உறுதிபாட்டின் அடிப்படையில் அந்நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியாவின் உதவி கிடைப்பதில் அதிபரின் இந்த பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தமது பயணத்தின்போது, மாலத்தீவு அதிபர், மும்பை மற்றும் பெங்களூருவுக்கும் செல்லவிருக்கிறார்.

<<<<<>>>>>

லெபனானின் பல்வேறு பகுதிகளில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேல் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 37 பேர் உயிரிழந்தனர். 150-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பெய்ரூட்டின் மத்திய பகுதியை குறிவைத்து இஸ்ரேல் படையினர் முதல் முறையாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராக கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக இஸ்ரேல் படையினர் நடத்திவரும் தாக்குதலில், தொடர்ந்து ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலால் ஆயிரக்கணக்கானோர் லெபனானில் இருந்து வெளியேறி சிரியாவில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இதற்கிடையே, இஸ்ரேல் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள லெபனானுக்கு மனிதாபிமான உதவியாக மேலும் 30 மில்லியன் யூரோ வழங்கப்படும் என ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

ஏற்கனவே பத்து மில்லியன் யூரோ வழங்குவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், லெபனானுக்கு சென்ற ஐரோப்பிய யூனியன் குழுவினர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் கூடுதல் நிதியுதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஹைதி தீவில் ஆயுதம் தாங்கிய நபர்கள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள Antibonite நகரில் திடீரென புகுந்த Gran Grif பிரிவை சேர்ந்த கும்பல் ஒன்று, சராமரியாக நடத்திய தாக்குதலில் இந்த சம்பவம் நேரிட்டதாக அந்நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹைதி தீவின் பெரும்பாலான பகுதிகளை அந்த பிரிவினர் கைப்பற்றி இருப்பதாகவும், அவர்களிடமிருந்து தீவை மீட்கும் நடவடிக்கையில் ஐ நா ஆதரவு பெற்ற அமைப்பினர் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

துபாயில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

-------------

ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – குரேஷியாவின் Ivan Dodig இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் Pedro Martinez – Pablo Carreno Busta இணையை வென்றது.

-------------

Ghana ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Diya Chaudhary இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஜிம்பாப்வே-யின் Sasha Natalie –ஐ வென்றார்.

--------------

சீனாவில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், ஐந்து முதல் எட்டாவது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா, அமெரிக்காவை வென்றது.

--------------

பெருவின் லிமாவில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இதுவரை 11 தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

--------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டி டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் சென்னை, லக்னோ உள்ளிட்ட எட்டு அணிகளும், மகளிர் பிரிவில் பஞ்சாப், தில்லி உட்பட ஆறு அணிகளும் பங்கேற்கின்றன.

***<<<<<END>>>>>***